மாநகராட்சியாகவாவது அறிவிக்க மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்று தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: கேள்வி போடவேண்டிய இடம் வேறு. வினா எண் 30. திரு. கே.எஸ். தென்னரசு, மாண்புமிகு சட்டம் மற்றும் தகவல் தொழில்நுட்பவியல் துறை அமைச்சர்.

30—

கணினி மென்பொருள் உற்பத்தி மையம்

* **67557—திரு. கே.எஸ். தென்னரசு:**

மாண்புமிகு சட்டம் மற்றும் தகவல் தொழில்நுட்பவியல் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஈரோடு மாவட்டத்தில் கணினி மென்பொருள் உற்பத்தி மையம் அமைத்திட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார், சட்டம் மற்றும் தகவல் தொழில்நுட்பவியல் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) மற்றும் (ஆ): ஈரோடு மாவட்டத்தில் கணினி மென் பொருள் உற்பத்தி மையம் அமைத்திடும் கருத்துரு ஏதும் அரசின் பரிசீலனையில் தற்போது இல்லை. ஆனால், தனியார் நிறுவனங்கள் கணினி மென்பொருள் உற்பத்தி மையம் அமைக்க முன்வந்தால் அரசு அதனை ஊக்குவிக்கும்.

திரு. கே.எஸ். தென்னரசு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு இதய தெய்வம் அம்மா அவர்களுடைய அரசில்...

முற்பகல் 11–00

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இதற்கான அமைச்சரின் பதில் முடிகிறவரை வினாக்கள்–விடைகள் நேரம் நீட்டிக்கப்படுகிறது.

திரு. கே.எஸ். தென்னரசு: மாண்புமிகு இதய தெய்வம் அம்மா அவர்களுடைய அரசில் 10,730 கோடி ரூபாய் மென்பொருள் ஏற்றுமதி செய்து, 15,000 கோடி ரூபாய் என்று இந்த ஆண்டு இலக்கு நிர்ணயித்துள்ள மாண்புமிகு இதய தெய்வம் அம்மா அவர்களுடைய

2006 ஜனவரி 18]

அரசில் தமிழகத்தில் ஆயிரத்திற்கு மேற்பட்ட தனியார் நிறுவனங்கள் செயல்பட்டுக்கொண்டிருக்கிற இந்த நேரத்தில் மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஈரோடு தொகுதி, சித்தோட்டில் உள்ள போக்குவரத்துப் பொறியியல் கல்லூரி வளாகத்தில் 350 ஏக்கருக்கும் மேலாக இடம் உள்ளது. ஈரோட்டைச் சுற்றியுள்ள வட்டாரப் பகுதிகளில் சுமார் பத்துக்கும் மேற்பட்ட பொறியியல் கல்லூரிகள் செயல்பட்டு வருகின்றன. தமிழகத்தில் உள்ள மாணவர் சமுதாயத்தின் வாழ்வில் ஒளிவிளக்கு ஏற்றிவைத்துள்ள மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஈரோடு மாவட்டம் மற்றும் அதனைச் சுற்றியுள்ள மாணவர் சமுதாயத்தின் வாழ்க்கையில் ஒளிவிளக்கு ஏற்றுகின்றவகையில் மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு மறுபரிசீலனை செய்து தனியார் நிறுவனங்களின்மூலம் ஈரோடு மாவட்டத்தில் கணினி மென்பொருள் உற்பத்தி செய்ய முன்வருமா என்பதை அறிய விரும்புவதோடு, தனியார் மென்பொருள் நிறுவனங்களுக்கு மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு என்னென்ன சலுகைகள் வழங்குகிறது என்பதையும் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தகவல் தொழில்நுட்பவியல் துறை சார்ந்த அதாவது, I.T.E.S. Policy எந்தக் கொள்கையும் இல்லாத ஒரு நிலையில் மாண்புமிகு அம்மா அவர்கள் ஒரு தெளிவான கொள்கையை வகுத்துத் தந்தார்கள். அந்த அடிப்படையிலே நிதிச் சலுகைகள், நிர்வாகச் சலுகைகள் மற்றும் I.T.E.S. சலுகைகள் என்று பல்வேறு சலுகைகள் அம்மா அவர்கள் அளித்து எந்த ஒரு தனியார் நிறுவனமும் I.T.-யோ அல்லது I.T.E.S.-யைச் சார்ந்த நிறுவனம் அமைப்பதற்கு முன்வந்தால் அவர்களுக்கு முழுமையான அளவிற்கு ஆதரவு கொடுத்து கரம் நீட்டி அவர்களை ஊக்கப்படுத்துவதற்கு எல்லாவிதமான ஒத்துழைப்பையும் அம்மா அவர்கள் கொடுத்து வருகின்றார்கள். எனவே, இந்த அடிப்படையில் கடந்த 1996–2001 ஆம் ஆண்டு வளர்ச்சி என்று பார்க்கும்போது 3116 கோடி ரூபாய், 2001 ஆம் ஆண்டு இறுதியிலே இருந்தது. ஆனால், மாண்புமிகு அம்மா அவர்கள் எடுத்து வந்த முழுமையான நடவடிக்கையின் காரணமாக, தெளிவான கொள்கையின் காரணமாக கிட்டத்தட்ட 10,830 கோடி ரூபாய் 2004–2005 ஆம் ஆண்டில் இருந்த மென்பொருள் ஏற்றுமதி இந்த ஆண்டு மார்ச் திங்கள் வரும்போது நம்முடைய மாண்புமிகு அம்மா அவர்கள் எடுத்த சீரிய நடவடிக்கையின் காரணமாக 15,000 கோடி ரூபாய் அளவிற்கு எட்டும் என்பதை நான் மிக

மகிழ்ச்சியோடு இங்கே கூறிக்கொள்வதற்குக் கடமைப்பட்டிருக்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

அதுமட்டுமல்லாமல், முந்தைய 1996–2001 ஆம் ஆண்டு ஆட்சியிலே கிட்டத்தட்ட 757 நிறுவனங்கள் இருந்த சூழ்நிலையில், இன்றைக்கு 1200–க்கு மேற்பட்ட நிறுவனங்கள் தமிழ்நாட்டிலே, சென்னையிலே தங்களுடைய தொழில்களைத் தொடங்கிக் கொண்டிருக்கிறார்கள். அதுவும் ஒரு நாளைக்கு ஒரு நிறுவனம் என்கின்ற அடிப்படையிலே இன்றைக்கு—கடந்த 2004–2005 ஆம் ஆண்டைப் பொறுத்தளவிலே, 400 நிறுவனங்கள் — மென்பொருள் நிறுவனங்கள் தொடங்கப்பட்டு கிட்டத்தட்ட 20 million sq.ft. 20 இலட்சம் சதுர அடிகள் இடத்தில் தங்களுடைய நிறுவனங்களின் வேலைகளைத் தொடங்கியிருக்கிறார்கள். எனவே இந்த நிலை இப்படி போகும்போது, அடுத்த ஒரு ஆண்டு காலத்தில் இன்னும் ஒன்றரை இலட்சம் பேருக்கு வேலைவாய்ப்புகள் உருவாவதற்கு நம்முடைய அம்மா அவர்கள் வழிவகுத்திருக்கின்றார்கள். எனவே, ஈரோடு மாவட்டம் அல்ல, எந்த ஒரு மாவட்டத்திலும் Tier-II cities அதாவது மதுரை, கோயம்புத்தூர், திருநெல்வேலி, அதேபோன்று திருச்சி போன்ற பெருமாநகரங்களில்கூட உருவாக்குவதற்கு உத்தரவிட்டிருக்கின்றார்கள். தனியார் முன்வந்தால் நிச்சயமாக I.T. Policy மற்றும் I.T.E.S. Policy-யிலே, கொள்கையின் அடிப்படையிலே அவர்களுக்கு உதவிகள் செய்யப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினாக்கள்–விடைகள் முடிவுற்றன.

[**குறிப்பு :** ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடப்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.]

2. விதி 110–ன்கீழ் அறிக்கை

அனைத்து ஊராட்சி ஒன்றியத் தலைமையிடங்களில் பொருட்காட்சி மற்றும் ஊரக இளைஞர் விளையாட்டு விழாக்களை நடத்துதல் – மாண்புமிகு முதலமைச்சரின் அறிக்கை

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவை விதி 110–ன்கீழ் (குறுக்கீடுகள்) அது ஆளுநர் உரையிலே இருக்கிறது. நன்றாகப் படித்துப் பாருங்கள். பேரவை விதி 110–ன்கீழ் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்